# தத்துவவிவேசினி

சென்னைலௌகிகசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. VI.—No. 19.] MADRAS:—SUNDAY MAY, 8, 287. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

குறிப்புகள்.
மதம்முதலிய.
ஆத்மபரிசோசனை.
கொள்ளிவாய்ப்பிசாசு.
இந்துவழக்கங்களைப்பற்றி.
வர்த்தமானசங்கிரகம்.

## குறிப்புகள்.

**கடவுள்அன்புள்ளவர்.**—சென்னை வருஷாந்தரசந்தையில் புதுவருஷதினம் சாயங்காலம் நானூற்று ஐந்துபேர் தீயிலெரிந்துமாண்டார்கள். அவர்கள் கிரிஸ்தவர்களல்லாமல் சுதேசவிக்கிரகாராதனைக்காரர்களாயிருந்தபடியால், அவர்களைக்காப்பாற்றும்பொருட்டுப் பிரவேசிக்கப் பராபரன் சித்தங்கொள்ளவில்லையாக்குமென்று சுவக்கியானி நினைக்கிறான். ஆயினும் அந்தத்துன்பத்திற்கு நியாயஞ்சொல்லவிக்கிரகாராதனைக்காரர்களுக்குவேறே வகையிருக்கிறது. சுதேசகும்புகளுக்குள் கிறிஸ்தவசிறுபுத்தகங்களைக்கொடுத்து தங்கள் தேவர்களை அவமதித்து அவர்களுக்குக் கோபமூட்டியதினாலே, சங்கார கர்த்தாவாகிய சிவன் அந்த இடத்தை பரிசுத்தப்படுத்தி, பிரமத்தின் கோபத்தைத் தணிப்பதற்கு நரபலி யாகஞ்செய்யும்படி அக்கினிதேவனையனுப்பினானென்று அவர்கள் சொல்லுகிறார்கள். சந்தையிலே சிறு புத்தகங்களையும், "கடவுள் அன்புள்ளவர்" என்பது முதலான வாக்கியங்கள் எழுதிய சீட்டுகளையும் சுதேசிகளுக்குப்பாதிரிமார்கள் கொடுக்கத்தலைப்பட்டது இதுதான முதல்தடவை. இந்தகோரமான காட்சிநடந்தபின்பு, கிறிஸ்தவக்கடவுள் அன்புள்ளகடவுள்தான் என்று அஞ்ஞானிகள் அகத்தியம் நம்பவேண்டியதுதான்!

**மிலேச்சர்மதம்.**—ஸர் ஜான் லபாக் என்பவர் மிலேச்சர்களைக்குறித்து எழுதிய உபன்னியாசத்தில் சொல்லியிருப்பதாவது:—உயிரில்லாவிட்டால் அசைவிராதென்றுசாதாரணமாய் நம்பிக்கைகொண்டிருந்தார்கள், ஆதலால் மனிதர்களுக்கிருப்பதுபோலவேமிருகங்களுக்கும் உயிரில்லாத பொருள்களுக்கும் ஆவியை அமைத்தார்கள். மிருகங்களைத் தொழுவது உலகமுழுவதும் பரவியிருந்ததாகக் காணப்பட்டது. அநேக விஷயங்களிலே தாழ்ந்தவகுப்பாருடைய மதக்கருத்துகள் நித்திரையிலுண்டாகிய சொப்பனங்களினாலே வெகுவாய் பலங்கொண்டன. சரீரம் அசைவற்றிருந்தபோது மனிதர்களுடைய மனது கனவுகளிலே வேலைசெய்துகொண்டிருந்தது, அப்படியே மிலேச்சர்கள் நித்திரைவேளையிலே தூரப்பிரதேசங்களுக்குப் போயிருக்கிற சிநேகிதர்களைக் காணுவதற்கு மனிதர்கள்திரிந்ததாக எண்ணினார்கள். ஆகையால் சரீரத்தைவிட்டுப்போகக்கூடிய ஆவி மனிதனுக்கிருந்ததாக அவர்கள் நம்பினார்கள். உறங்குவதுபோலும் சாக்காடு என்பது மிலேச்சர்களுக்கும் படாமற்போகவில்லை; மனிதர்கள் தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்டது காணப்பட்டதுபோலவே பிரேதக்குழியிலிருந்து மனிதன் எழுந்திருப்பானென்கிற எண்ணமுமுண்டாயிறறு. மிகவும் இழிவான மிலேச்சர்களுக்கு யாதொரு மறு உலகம உண்டென்கிற எணணமில்லவேயில்லை, ஆனால் ஒருகால் அப்படிப்பட்ட எண்ணம் உண்டானபோது, அது பிடிவாதமாய் நிலைநிறுத்தப்பட்டது. பூர்வீகபிரிட்டானியர்கள் மறு உலகத்திலே கடனைச் செலுத்திவிடுகிறதாக சொன்னவர்களுக்கு உடனே பணம் கடன்கொடுத்துவந்தார்கள். தலைவர்கள்மாத்திரந்தான் மோட்சத்திற்குப்போனார்களென்று சிலஜாதியார்கள் நம்பினார்கள், சிலஜாதியார்கள் புருஷர்களுக்கு ஆன்மாயிருந்ததென்றும் ஸ்திரீகளுக்கு இல்லையென்றும் நம்பினார்கள். ஒருவன் இறந்துபோவதுபோலவே மறுபடியும் எழுந்திருப்பானென்று தாழ்ந்த ஜாதியார்களுக்குள்ளும் மிகவும்சாதாரணமான நம்பிக்கையுண்டாயிருந்தது. பிஜியன் சாதியாருக்கு இந்தஎண்ணம் பூர்த்தியாயுண்டாயிருந்தபடியால் விருத்ததசைக்குறிகள் உண்டானவுடனே ஆவலோடுபிராணனைவிட்டுவிட்டார்கள். இதனாலே அநேக கிராமங்களிலே கிழவர் என்பது இல்லவேயில்லை, மிலேச்சனுடைய கொடுமை-துரோதம்-இரக்கமின்மையோடுகூடிய தன்னுடையசாயலாகத் தன்தேவர்களைசிருஷ்டிசெய்துகொண்டான். அவனுடையமதமோமுதலில் கொடூரமும் பயங்கரமுமுள்ளதாயிருந்தது; மறைபொருளுமதுஷ்டத்தனமுமுள்ள தேவர்கள் இருந்தார்களென்று அவர்களுடைய பூர்வீகாளுக்குண்டாயிருந்த நம்பிக்கையினாலே அவர்கள் எவ்வளவுபாடுபட்டார்களென்று தெரிந்துகொள்வது கஷ்டமாயிருந்தது.

---

*ராஜா ஸர். டி. மாதவராவ் K. C. S. I. அவர்களால் கன்வோகேஷனில் வாசிக்கப்பட்ட உபந்நியாசத்தின் பாகம்.*

## மதம்.

மதவிஷயமானது கஷ்டமும் நாசூக்குமுள்ளது. அதைக்குறித்துச் சொல்லவேண்டியதாயினும், தொட்டுக்காட்டிவிடவேண்டியதே. அதைப்பற்றி நாம் யோசியாமல் சுத்தமாய்விட்டுவிடுவதும் பிசகு. ஒவ்வொருவரும் தனக்கு நம்பிக்கையுள்ள கொள்கையின்படி நடக்கவேண்டும். மதவிஷயத்திலே சர்வத்திராளுக்கும் ஒப்புதலாகும்படி சரியான ஞானம அடையத்தக்கதாயில்லை. ஆதலால், தாராளமாய்ப் பொறுத்துக்கொண்டு, யாவரிடத்தும் சகோதர வாஞ்சை கொண்டிருப்பது பெருத்த கடமை. மதமானது சன்மார்க்கத்துக்குத் துணையாயிருக்கிறதென்று எண்ணப்படுவதால், யாதொருமதமுமில்லாதிருப்பதைப்பார்க்கினும் ஏதாவதொன்றை வைத்துக்கொள்வது நல்லது. நிச்சயிப்பது கஷ்டமும் பிசகிப்போவது சுலபமுமாயிருக்கிறபடியால், பலவகைகளினாலு முண்டாகிறவிளக்கங்களை நான் ஏற்றுக்கொள்ளுவேன். அதாவது:—சாதாரணமாய் சிருஷ்டிப்பொருள்களினின்றுண்டாகும்விளக்கம்; கியானத்தினால் பிரகாசிக்கிற மானிடநியாயத்தினின்றும் விவேகத்தினின்றும் மனசாட்சியினின்றும் உண்டாகிற விளக்கம்; நம்மால் மதிக்கப்படத்தக்கவர்களாய் எந்தக்காலத்திலுமிருந்த சிறந்தோருடைய அபிப்பிராயங்களிலும் கொள்கைகளிலுமிருந்துண்டாகிற விளக்கம்; மானிடசமூகத்திற்கு வேண்டியிருப்பவற்றினின்றுண்டாகிறவிளக்கம்; எது இருக்கலாம் போலத்தோன்றுகிறதோ அல்லது க்ஷேமகரமாயும் ஆறுதலாயுமிருக்கலாமோ அப்படிப்பட்டதை ஆலோசிப்பதினின்றுண்டாகிற விளக்கம்.

*தேசாபிமானியும், இராஜாங்கமுறையறிபவரும்.*

இவ்விருவகையில் ஒரு வகையார் அல்லது இரண்டுவகையாருமாகவேண்டுமென்கிற இச்சை கல்வியிற் சிறந்த அநேகருக்குண்டு. அவ்விச்சை இயல்பாயும் உறங்கொண்டதாயும் தானேயுதிப்பதாயுமிருக்கிறது. அது உபயோகமும் பெருமையுமுள்ளதென்றே நான் துணிவாய்ச்சொல்லுவேன். அதற்காக ஒருவரும் துக்கப்படவேண்டுவதில்லை, யாவரும் சந்தோஷிக்கலாம். கல்விகற்றவர்கள் தேசாபிமானிகளும் இராசாங்க முறையறிபவர்களுமாகாவிட்டால், பின்னையார்தான் ஆவார்கள்? தற்காலத்தில் இந்தியாவானது சந்தோஷத்துடனே அனுபவித்துவருகிற சகலநன்மைகளையும்காப்பாற்றுதலும் அது இனி விர்த்தியடைவதும் தேசாபிமானிகளாலும் இராஜாங்கமுறையறிபவராலும் உண்டாகவேண்டியதே. இந்தியாவிலே நானாவித வருணபேதமுள்ள அகன்ற ஜனசமூகத்துக்குள்ளே இந்த வகுப்பார்தான் விர்த்தியாகுஞ்சனங்களால் கற்கப்படவேண்டிய சகலத்தையும் கற்பதற்காக இங்கிலாந்து நமக்கு வாய்க்கச்செய்கிற சிறந்தசமயத்தைத் தெரிந்துகொண்டுபாராட்டி உபயோகித்துக்கொள்ள மிகுந்த சக்தியுள்ளவர்கள். அநேக நூற்றாண்டுகளாய் கஷ்டப்பட்டுஉண்மையானவிசாரணைசெய்து குவித்திருக்கிற விரிவான கியானக்களஞ்சியத்தை இங்கிலாந்து தேசம் நமக்கெதிரில் பரவச்செய்திருக்கிறது. இந்தக்களஞ்சியங்களை நாம் பாடுபட்டு உரித்தாக்கிக்கொள்ளவேண்டும். அவற்றைப் பாராமல் நாம் கண்ணை மூடிக்கொண்டிருப்போமாகில், அது விவேகத்திற்குக குறைவும் தோஷமுமாகும். உபயோகமான சகல கியானங்களையும் உட்கொண்டு ஜீரணப்படுத்திக்

கொள்ளவேண்டும்; அவற்றுள் இராசாங்கமுறையறியும் கியானம் நிச்சயமாகவே அதிகமுக்கியமானது.

ஜனசமுதாயச் சீர்திருத்தம்.

"இன்பத்தைவிர்த்திசெய்க, துன்பத்தைக்குறைக்க." என்னுஞ்சிறந்த கோட்பாட்டுக்கு உங்கள் கொடியைப்பிடியுங்கள். ஜனசமுதாயசீர்திருத்தமென்னும்நாட்டிலல்லாமல்அதற்கு மிஞ்சின வேறொருநாட்டிலும் அந்தக் கொடியை நாட்டமாளாது. துரைத்தன விஷயங்களிலே செய்வதைப்பார்க்கினும், அவ்வளவுபிரயாசையெடுத்துக்கொண்டால், சீர்திருத்தவிஷயத்திலே அதிக நன்மை செய்யக்கூடும். கனவான்களே, சீர்திருத்தமுண்டுபண்ணினவர்களாகிய ஹோவார்டு உல்பர்போர்ஸ் இவர்கள் கனவிலும் நினையாத வேலைகள் இவ்வுலகத்திலிருக்கின்றன! சில சீர்திருத்தங்கள் கஷ்டமானவை, மற்றவைகள் சுலபமானவை. திருஷ்டாந்தங்கள்மூலமாயாகிலும் அவற்றை எடுத்துக்கூற இவ்விடத்தில் சரிப்படாது. இந்தவிஷயத்தில் அக்கறையுள்ளவரொவரிடத்திலாகிலும் பேசுவதற்கு நான் சித்தமாயிருக்கிறேன். நீங்களெல்லாரும் அந்த அக்கறைகொண்டிருக்கவேண்டும். அதவா சுலபமான சீர்திருத்தங்களை ஆலசியஞ்செய்யாமல் சித்திக்கப்பண்ணவேண்டும். தலைமுறை தலைமுறையாய் அவற்றைத் தள்ளிக்கொண்டே வருவது அபரிமிதமாய்ச் சுயதுரைத்தனஞ் செய்யவேண்டுமென்று விருப்பங்கொள்ளுகிற கல்விமான்களுக்கு அழகன்று. கனவான்களே, இந்தவிஷயத்தில், இந்தியஜனங்கள், வேறேயாதொருதேசத்து ஜனங்களைப்பார்க்கிலும், தாங்களாய்ப் பரிகரித்துக்கொள்ளக்கூடிய துன்பங்களினாலே அதிகமாய்ச் சிரமப்படுகிறார்களென்று நான் உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன். இந்தப் பிரசிடென்சியில் பாவியிருக்கிற சங்கங்களில் ஒவ்வொன்றும் "அந்தத்துன்பங்களில் எதையாவது நிவர்த்திசெய்யவாகிலும் குறைக்கவாகிலும் நாம் என்னசெய்தோம்"? என்கிற கேள்வியை சென்றுபோகிற அந்தந்த வருஷக்கடைசியில் தமக்குத் தாமேகேட்டுப்பார்க்கவேண்டியது.

---

## ஆத்தும பரிசோதனை.

அறிவுடையோர் ஆத்துமத்தை அறிவென்பர். இவ்வறிவாகிய ஆத்துமம் அத்தி கடை எறும்பு முதலிய ஜீவன்களிலும் தாவரங்களிலும் அவ்வவற்றின் கருவிகரணங்களுக்குத் தக்கவாறுவிளங்கும். இவ்வறிவு இன்மையே இறப்பெனப்படும். இவ்வறிவு எங்ஙன மில்லாததாகுமெனின் கட்டைநெருப்பைக் கண்டுகொண்டிருக்கும்போதே அக்கினியின் நிலைமை அணுவணுவாய் மற்ற பூதங்களில் அந்தர்க்கதமாய் அடைந்து ஆகாயத்தை அளாவுமாபோலாம். இன்னம் இதனது உண்மையை இடம் நேர்ந்துழி எடுத்தியம்புவாம். சிலர் ஆத்துமத்தை அணுவினும் நுண்ணிய ஆவிப்பொருளென்பவர். இஃது தேகத்தைவிட்டு நீங்கும்போது வெட்டுக்கிளியைப்போல் வேறுதேகத்தைப்பற்றுக்கோடாய்ப் பற்றிக்கொண்டு விடுமாம். விடும்போது அத்தன்கர்மானுசாரமான தேகத்தைத் தேவன் தந்தருளுவாரோ ஆத்துமம் தேடிக்கொள்ளுமோ என்பதைப் பரியாலோசிப்போமாக. "ஊழ்கூட்டும்படியன்றிக் கூடாவா" மென்பதையொழித்து கோகூட்டும்படியன்றிக் கூடாவாமென்றுகொள்ளுவோமானால், பிரளயத்தாலும், அக்கினியாலும், கப்பல்முழுகுவதாலும், பூகம்பத்தாலும் ஜீவர்கள் அனேகங்களாய் ஒரேகாலத்தில் திடீலென்று மாண்டால் அவ்வாத்துமாக்களுக்கு அரன் அக்கணமே வித்தாலாகிய அவ்வளவு தேகங்களையும் அமைக்கவேண்டுமே, ஆத்துமங்கள் அகலுவதற்கு முன் வேறுதேகங்களைத் தேடிக்கொண்டு அகலுமாயின் நரகமென்பது பாழ்படும், நரகஸ்தானமில்லாததாகையில் மற்றொன்று உள்ளது இல்லது சொல்லாமலமையும். தேகத்தை ஆன்மமே அடைவதாயினும் அரன் அடைவிப்பதாயிருந்தாலும் அவ்வாத்துமா கருவில் எச்சமயத்தில் நுழையுமென்று யோசிப்போமாக. சிலர், ஆத்துமம் பிண்டத்தில் புகும்போது 5-அல்லது 9-வது திங்களென்பர். 5-அல்லது 9 திங்கள்வரைக்கும் அப்பிண்டத்தில் ஆத்துமமில்லாமையால் அப்பிண்டம் பிணத்திற்குச் சமானமாகும். அதுபிணமாயின் தருப்பைநுனியளவு வித்து கருப்பைக்குளிருக்கையில் கரசரணாதிகளை யெப்படியடையும்! கரசரணாதிகளை வளரக்காண்கின்றபடியால் ஆத்துமம் அப்பிண்டத்தினுள்ளிருந்ததாகின்றது. வித்து கருப்பைக்குள் செல்லுகையில் ஆத்துமம் அதனுடன் நுழைந்ததென்போமாயின் அச்சமயமறிந்து ஆத்துமம் பொருந்தியது ஆச்சரியத்திலும் ஆச்சரியமே. இச்சமயம் மனிதவித்தை விருக்ஷவித்துக்கொப்பிட்டுக்கொள்ளுவோம். வித்து பூமிக்குள் விழுகையில் ஆத்துமம் சேர்வதாயின் அவ்வித்தில் ஆத்துமமில்லாதாகின்றது. ஆனால் இது வறுத்தவித்தா! அல்ல; ஏனெனில் அவ்வித்துக்குள் முளைக்கும் அம்சம் அடங்கி ஓட்டால் மூடப்பட்டு அதற்குச் சம்பந்தமாகிய மண்ணீர்முதலியவற்றின் போஷாப்பால் வளர்ந்தோங்கும். வித்து ரூபமானபின்பு ஆத்துமம் அதினுள் நுழைந்ததெனக்கொள்ளக்கூடாது. வித்து ரூபத்தையடையும்போதாகினும் ஆத்துமம் நுழையுமாவென்று ஆலோசிப்போம். மனிதருக்கு ஏறக்குறைய பதினாறும்வயதிலும் தாபரங்களுக்கு அவ்வச்சொரூபங்களுக்குத்தக்கவாறு குறிப்பானகாலத்திலும் அது உதிக்கும். எங்ஙனமெனில் தெங்குக்கு ஐந்துமுதல் பத்துவருஷத்திற்குள்ளாக உற்பத்தியாகின்றது. அக்காலத்தில் ஒன்றல்ல பல குரும்பைகள் காண்கிறோம். அவ்வாறே மனிதனுக்குப் பதினாறும்வயதில் அவனுடைய தேகத்தில் பலவித்துகள் உதிக்கின்றன. அக்காலத்திலாகிலும் ஆன்மாக்கள் வந்தடையுமென்போமானால் மனிதன் தேகத்தில் அப்போதுபலவித்துகள் மீன்சினையைப்போலிருக்குமாயின் எத்தனை ஆன்மாக்கள் ஒரு தேகத்தில்வந்து குடிகொண்டிருப்பது? மேலும் வயிற்றுக்குள் கிருமிகள் அனேகங்களாயிருக்கின்றனவே. ஒவ்வொன்றுக்கும் ஆத்தும சித்தாந்தத்தின்பிரகாரம் ஆத்துமம் இருக்கவேண்டுமே. அப்போது ஒரு ஆத்துமத்திற்குள் எத்தனைகோடி ஆத்துமங்கள் குடிகொண்டிருப்பது. இவ்வாறே விருக்ஷங்களுக்கும் வித்துகளுக்கும் காலமழியும்பரியந்தம் அநேக ஆத்துமாக்கள் உதித்துப் பிரிவனவாகின்றனவே. இச்சோதனைகளால் ஆன்மாதேகத்தைவிட்டு நீங்குகையில் வேறு தேகத்தைப் பற்றுமென்பது அசங்கதம்.

C. A.

---

## கொள்ளிவாய்ப்பிசாசு.

கொள்ளிவாய்ப் பிசாசென்பது எப்பொழுதும் ஆகாயத்தில் காணப்பட்ட, இயற்கையில் அழகிய நீலநிறமுள்ள, ஓர்வகைப்பிரகாசம் பொருந்திய காற்று. இது சாதாரணமாக எப்பொழுதும் சகதியாயிருக்கிற சதுப்பு நிலங்களினின்றும், ஈரமுள்ள நிலங்களில் பிரேதங்கள் அடக்கஞ்செய்யப்பட்டிருக்கிற சவக்குழிகளினின்றும், இடுகாட்டினின்றும், தரைமட்டமாகவாவது அல்லது அதற்குச் சற்றுமேலாகவாவது உலாவிக்கொண்டிருக்கும். எரி நட்சத்திரம் ஆகாயத்தில் மின்னல் முதலிய பலவினோதமான ஆகாயத்தோற்றங்களைப்போல இது ஆகாயத்தில் உயரத்திலிருந்து உண்டாகாமல், பூமியிலிருந்து கிளம்பி அதற்குச்சில அடிமட்டுந்தான் மேலேசென்றுஅலையும். இது ஓரிடத்திலிராமல் எப்பொழுதும் அங்குமிங்குமாய் அலைந்தவண்ணமாக இருக்கும். சிலவேளை பூமிக்குச் சற்றுமேலே நிற்கும், உடனே பூமி மட்டமாய்ப் படியும்; ஒரு நொடிப்பொழுதிற்குள்ளெல்லாம் வெகுதூரத்திற்போய் பந்தம்போலத் தகதகவென்றெரியும்; ஒருவேளையில் ஒன்று இரண்டு கவராகிவிடுவதும் அல்லது இரண்டு ஒன்றாகச்சேர்வதும் உண்டு. இது உண்டாகிறவிதம் எப்படியெனறு எளிதில் அறிந்துகொள்ளலாம், ஜீவவர்க்கம் அல்லது தாவரவர்க்கத்தைச் சேர்ந்த பதார்த்தங்கள் அழுகிப்போவதினாலே அவைகளிலிருந்துஎரியுந்தன்மையுள்ள ஜலவாயு திரளாக உண்டாகிறது. ஜீவராசிகளின் தேகங்களினின்று உண்டாகியவிது காற்றில்பற்றி எரியும். பாஸ்பரஸ்ஸென்னும் வஸ்துவானது தேகம் அழுகுவதினால் கொஞ்சங்கொஞ்சமாகப் புறப்பட்டுக்கொண்டே இருக்கும், இவ்விரண்டு வஸ்துக்களும் ஒன்றோடொன்று சேர்வதினால் (Phosphorated Hydrogen Gas) என்னும் ஓர்வித அக்கினி வாயுவாகின்றது. இதைத்தான் கொள்ளிவாய்ப்பிசாசென்று சொல்லுவார்கள். இக்காரணங்களினாலேதான் நமது தேசத்தில் எப்பொழுதும் சேறுஞ் சகதியுமுள்ள சதுப்பு நிலம், ஆறு, ஏரி, குளம், ஓடை, குட்டை, இடுகாடு முதலிய இடங்களிலிருந்து அடிக்கடி இவ்வெளிச்சம் உண்டாவதைக் காண்கிறோம். பகல்வெளிச்சத்தில் இதுநன்றாகத்தெரியாது, ஆனால், இரவிலோ தீவட்டிபோல் சுடர்கொண்டெரியும். கொஞ்சம் கந்தகத் திராவகத்தை ஒரு சிறிய இரும்பு அல்லது துத்தநாகத் துண்டின்மேல் வார்த்தால் எரியுந்தன்மைத்தாகிய ஜலவாயுவுண்டாகும்; மிகச்சிறிய ஓர் துண்டு பாஸ்பரஸை அதிக நுட்பமான ஓர் துத்தநாகத்தூளுடன் கலந்து பளிங்குபாத்திரம் ஒன்றில் வைத்து, அதில் கந்தகதிராவகத்தை வார்த்தால், அதினின்று அக்கினிஜலவாயு வுண்டாகும். அப்பொழுதும் அந்தப் பளிங்குபாத்திரத்தைப்பார்த்தால், அந்த திராவகத்தினமேல் கொள்ளிவாய்ப்பிசாசின் நீலநிற ஆவியைக் காணலாம். இந்த ஆவி அதினி… கிளம்பிக் கொஞ்சம் மேலே சென்றவுடன் நெருப்புப்பற்றி எ…யும். இதனால், கொள்ளி வாய்ப் பிசாசென்பது தவறு; …மி… யினின்று எழும்புகின்ற ஓர்வகையான ஆவியென்று தெ… கொள்க.

M. M.

---

## இந்துவழக்கங்களைப்பற்றி.

The Hindu Prakash.—டாக்டர் போலன் என்பவர் இந்துவைதிகசார்பாக வாதிக்கவந்தார்; அவர் ஐரோப்பியராகவும் வித்துவானாகவும் இருப்ப…

ற்காக் மதிக்கவேண்டியதுபற்றி, ஜனசமுதாய சீர்திரு
த்தத்திற்கு வைரிகளாய் இருப்பவர்களுடைய சங்கி
யை இவர்நூதனமாய்ச்சேர்ந்து விர்த்தியானதற்காக
நாம் சுபங்கூறுகிறோம். ஆனால நம்முடைய தற்கால
விவாக வழக்கங்களுக்கு ஆதரவாக டாக்டர்போலன்
அடித்துப்பேசிய வாதத்தின் உறுதியைப்பற்றி நாம் சு
பங்கொண்டாடமாட்டோம். நம்முடைய விவாகவழ
க்கங்களைபற்றி செய்யப்படும் பலமானசர்ச்சையான
து தங்கள் பூர்வீகாள் மூடர்கள் என்கிற நம்பிக்கையை
யும் பூர்வீகாளைப்பார்க்கிலும் தாங்கள் புத்திமான்க
ளென்கிற நம்பிக்கையையும் தற்கால தலைமுறையார்க
ளுடைய மனதில் நிலைநாட்டுகிறதென்று அவர் அபிப்
பிராயப் படுகிறபடியால அப்படிப்பட்ட சர்ச்சைமுழு
வதையும் நசுக்கிவிடுகிறார். அவருடைய வாதத்தை
பூர்த்தியாய் ஆராய்ந்துபார்ப்போமாகில, டாக்டர்போ
லனுடைய நியாயங்கள் சீர்திருத்தமுழுவதையும் வே
ரோடு களைந்துவிடுவதாகும். நமது பூர்வீகாள் விதியா
க ஏற்படுத்தி அனுசரித்துவந்த சகலத்தையும் நம்மை
பந்தப்படுத்தும் விதியாகக்கொண்டு நன்மையாக மதித்
து வருவோமாகில், உலகம் பாழுதான். எதினால்
நாம் இவ்வளவு பிரயோஜனம் அடைந்திருக்கிறோமோ
அப்படிப்பட்ட நானாவிதமான நன்மையைக் கண்டுபிடி
த்தவர்கள் பின்வரும தங்கள் சந்ததியானா பூர்வீகாளை
ப்பார்க்கிலும் புத்திமான்களாகும்படி கற்பிக்கிறார்கள்
என்பதாக அவர்களை புதைத்துத்தள்ளிவிட்டால, அந்
தநன்மைகள் என்னமாய்ப்போகிறது? கிட்டநெருங்
கிவந்து யோசிப்போம், நமது பூர்வீகாள் எல்லா அன்
னிய தேசஸ்தர்களையும் மிலேச்சர்களென்று எண்ணி
யிருந்தார்கள், அவர்களைத் தொட்டமாத்திரத்திலேயே
தீட்டுண்டாய்விடுகிறது. அதுசரியல்ல வென்று நி
னைக்கும்படி நாம் கற்பிக்கப்பட் டிருக்கிறோம், இந்த
மாறுதலைக்கூட டாக்டர்போலன்அடித்துவிடுவரோ?
பிரேதங்களை யறுப்பது ஒரு இந்துவிற்கு குறைவென்
று நமது பூர்வீகாள் எண்ணியிருந்தார்கள்; ஆனால் இ
ப்போது வேறுவிதமாய் நினைக்கும்படி நாம் கற்பிக்கப்
பட்டிருக்கிறோம். அநேக பிராமணர்கள் இப்போது
டாக்டர்தொழிலநடத்திக்கொண்டும்மெடிக்கல்காலே
ஜிகளிலேபயின்று கொண்டுமிருக்கிறார்கள். இதற்குக்
காரணம் இரண்டுண்டு—இந்தியாவில் இங்கிலீஷ்காரா
கள்வந்திருப்பதும், இங்கிலீஷ்பாஷா போதனையுமே.
இங்கிலீஷ்காரர்களோடு இடைவிடாது பழகுவதினாலு
ம் அவர்களுடைய கடைப்பிடியையும் சாஹசகிர்த்தி
யத்தையும் பொறுத்துக்கொள்ளும் சக்தியையும் கா
ணுவதினாலும், அவர்களைப்போல நாமும் இருக்கவே
ண்டுமென்றும், நம்முடைய பூர்வீகாளிடத்திலிருந்து
நமக்குவந்திருக்கிற சில அஞ்ஞான பிடிவாதங்களை நா
ம் அனுசரித்து வருகிறவரையில் நாம் இங்கிலீஷ்கார
ரைப்போலாவது சாத்தியமல்லவென்றும் உணரத்தெ
ரிந்துகொண்டிருக்கிறோம். அதிருக்கட்டும், இங்கிலி
ஷ்காரர் இந்தியாவில் வந்திருப்பதினாலே நாம் நமது
பூர்வீகாளை மூடர்களென்று நினைப்பதற்கு இடமுண
டாயிருக்கிறபடியால், இங்கிலீஷ்காரர் உடனே இந்தி
யாவை விட்டுப்போய்விட வேண்டுமென்று சொல்லு
வதற்காவதுடாக்டர்போலன் முன்னுக்கு வருவாரா?
அவர் தம்முடையவாதத்தை யெவ்வளவு மட்டில் நெ
ட்டசித்தமாயிருக்கிறாரோ? டாக்டர்போலன் அவர்க
ளிடத்திலிருந்து பின்னும் விசேஷமான ஆழ்ந்தநியாயா
ங்களை யெதிர்பார்த்திருந்தோம், அவர் ஒருவாறாய் இந்
து வைதிக சார்பாகப்பேசினதினாலே சிறப்படைந்து
விட்டதாக, கல்வியிற்சிறந்த இந்துவைதிகவாதிகள் நி
னைப்பதற்கு இடமில்லை.

## வர்த்தமானசங்கிரகம்.

**லண்டன்** பட்டணத்திலிருந்து தெலிகிராம் வரப்பெற்றபய
னீர் பத்திரிகை கூறுகிறதாவது.—(சென்ற ஆதிவாரங்காலமே
நாலுமணிக்கு தாஸ்மானியா என்னும் நீராவிக்கலம் கனாதட்டி
ற்று. முப்பதடி மணலிலே பதிந்து விட்டது, அதன் பின்னணி
யாறைகளிலே மோதியது. காலவித்தியாசமொன்றும் இல்லா
திருக்கச்சே நல்ல நிலாவெளிச்சத்தில் இந்த இடையூறு சம்ப
வித்தது. எட்டுபடகுகளில்ஐந்துபடகு கவிழ்ந்தும் சிதைந்தும்
போயின. நீர் உபுக்கினாலே பெண்டுகளைக் கஷ்டத்தோடுகரை
க்குக்கொண்டுவந்து சேர்க்கலாயிற்று. புருஷர்களும் இரண்டு
ஸ்திரீகளும் இருபத்துமூன்றுமணிநேரம் அபாயமான நிலையிலி
ருந்தார்கள், ஆனால் கடைசியில் உல்லாசப்படகு ஒன்றினாலே
காப்பாற்றப்பட்டார்கள். மகா ராஜா ஸர் பிரதாபசிங் அவர்க
ளுடைய நாலுலட்சம்ரூபாய் பெறுமான நகைகள் நஷ்டமாய்
ப்போயினவாம்.

**பெங்களூர்.**—நிகழும் மாசம் முதல்தேதி கொஞ்சம் மழை
பெய்தது.—சென்றசெவ்வாய்க்கிழமைபின்னிஉண்ட்கம்பெனி
காபிதொழிற்சாலையிற் சேர்ந்தமிஸ்டர் ஆலாண்ட் வண்டியில்
போகையில், குதிரையிரண்டு உதைத்து வண்டியை கொஞ்ச
ஞ்சேதப்படுத்தி தன்னையுங் காயப்படுத்திக்கொண்டது. கு
திரைக்காரன் குதிரையை தயிரியத்துடனே கெட்டியாய்ப் பிடி
த்துக்கொண்டு அதிகசேதமுண்டாக ஒட்டாமல் தடுத்தான்;
உள்ளேயிருந்தவர்கள் காயம்படாமல் காப்பாற்றப் பட்டார்
கள்; அவர்களில் இரண்டு பேர்குழந்தைகள். [எப்பொழுது
ம் சமர்த்தனை குதிரைக்காரனை வைத்திருப்பது நலம்.]—
52வது பாரக்சிலேசிலநாளுக்குமுன்குண்டுவெடிசுடப்பட்டது,
சுட்டவன் இன்னானென்று தெரியவரவில்லை. சென்றதுருவா
ரத்துக்கு முந்திய குருவாரம் இராத்திரி $8\frac{1}{2}$ மணிக்கு வெடி
சத்தங்கேட்டது; அந்தமட்டில் இந்தத்தடவை சுட்டவன் அ
கப்பட்டான்: முன் சுட்டவனும் இவன்தானென்று நிச்சப்ப
தற்கு வேண்டியமுகாந்தரமிருக்கிறது. அவனை சனிக்கிழமை
காலமே கமாண்டிங் ஆபீஸருக்கு முன்பாக கொண்டுவந்தார
கள்; அவனுக்கு 68 மணிநேரம் கடுங்காவலும், சம்பளப்பிடி
ப்புடனே 21 நாள பாரக்ஸ் காவலுமாகிய உபாயமான சிட்சை
விதிக்கப்பட்டது. முன்னொருதரம் இவ்விதமானகுற்றம் நடந்த
தற்காக 12 மாசத்திய காவல்தண்டனை விதிக்கப்பட்டது. தற்
காலகுற்றவாளி தனக்குக்கிடைத்த சாந்தமான தண்டனைக்கா
க சிரிக்கிறான் என்பதற்கு சந்தேகமில்லை.

**பாம்பே.**—டாக்டர். பி.டி. பர்ஜோர்ஜி என்பவர் சென்ற
சனிக்கிழமை தனது கோட்டை கிரகத்தில் இறந்துபோனார்,
அவருக்குவயசு 63. அவர் எல்பின்ஸ்டோன் வித்தியாசாலையில்
வாசித்து, முதல் முதல் தேறின கிராண்ட் மெடிகல் காலேஜி
கிராடியேட்டுகளில ஒருவர். கொஞ்ச காலம் அவர் பொம்பாயி
ல் வயித்தியஞ் செய்துகொண்டிருந்து கோட்டைத்தருமவயித்
தியசாலையில் உபகாரமாக வேலைசெய்துகொண்டுவந்தார். தன்
மக்களின் படிப்பு நிமித்தமும் வர்த்தகத்திற்காகவும் அவர்
1858 வது வருஷத்தில் இங்கிலாந்துக்குப்போய், அங்கிருந்த
பதினொரு வருஷகாலத்திலே முப்பது இலட்சம் ரூபாய்க்கு
அதிகமாகவே சம்பாத்தியஞ்செய்தார்; 1864 ஆம்வருஷத்தில்
அமெரிகன் சிவில் வார் என்னும் சண்டைமுடிவிலே பருத்தி
ஏற்றுமதிசெய்த மற்றவர்களைப்போல் இவரும் தன் செல்வத்
தையிழந்தார். பெண்கள் வித்தியாபிவிர்த்தியில் அதிக சிரத்
தையுள்ளவர்; பொம்பாயில் ஒரு பெரிய பெண்கள்பாடசாலை
யும் ஆசுபத்திரியும் ஏற்படுத்தி, ஆஸ்திவைத்து, நிரந்தரமாய
நடந்துவரும்படிச்செய்ய எண்ணங்கொண்டிருந்தவர்: ஆனால்
வியாபாரமோசத்தால் அவருடைய எண்ணம் நிறைவேறாமற்
போயிற்று. 1868 ஆம் வருஷத்தில் அவர் பொம்பாய்க்கு திரு
ம்பிவந்தபின்பு, மறுபடி வயித்தியத்தை ஆரம்பித்து, அவ்விடத்
திய முனுசுபாலிடிக்கு மெடிகல எச்சாமினராக நேமிக்கப்பட்
டு, இறந்துபோகிறவரையில் அந்த உத்தியோகத்திலேதானே
இருந்தார்.

சர் உல்லியம் வெடர் பரன், பார்ட்டு அவர்கள் சிவில் சர்
விசைவிட்டுப் போவதுநிமித்தம் யாவருக்கும் அதிக விசனமு
ண்டாயது. அவருடையகாலம் ஜூடிஷல இலாகாவிலே பெ
ரும்பாலும் ஹைகோர்ட்டு ஜட்ஜி ஹோதாவனாயில் கழிந்தது.
ஜட்ஜியாக அவருடைய உயர்ந்த அலுவல்களை நடத்திய திற
மையைப்பற்றி அபிப்பிராயங்கூறுவது கடமை கவர்னமெண்டா
ருடைய அதிகாரவரம்புக் குட்பட்டதல்ல வென்றும், ஆனால்
அவர் ஒருவருஷகாலம் ஆக்டிங் சீவ் செகிரிட்டேரியாகவும்
கொஞ்சகாலம் கவுன்சிலில் மெம்பராகவுமிருந்து நெருங்கி ஊ
டாடிக்கொண்டு சிறந்த உதவியும் யோசனையும் புரிந்து வந்த
தனால் அவருடைய திறமையை சிலாக்க்க வேண்டியிருக்கிற
தென்றும், இத்தேசத்து சுதேசிகளுக்கு கலவி பயிற்றுவிப்பதில்
அவருக்குண்டாயிருந்த சிரத்தையையும், அவர்களுக்கு நல்
லொழுக்கமுதலிய முக்கியமான விர்த்திக்கு அனுகூலமான
சகல வகைகளையும் தேடுவதில் அவருக் குண்டாயிருந்த
ஆவலையும் நாம கண்டறிந்தமட்டில் அவருக்கு நாம் பு
கழ் சொரிய வேண்டியதா யிருக்கிற தென்றும், அப்படிப்
பட்டவர் உத்தியோகத்தை விட்டு நீங்குவதற்காக விசனப்
படவேண்டியதா யிருக்கிற தென்றும் ஆலோசனை சபையி
லுள்ள கவர்னர் அவர்கள் ரிகார்ட்டுசெய்வித்தார்கள்.—மேற்

படி வெடர்பரன் அவர்கள் நிமித்தம் பொம்பாய் சுதேசகுடிகள் பெரிய ஷெரீப் சபைகூட்டி, அவர் தங்களுக்குச்செய்த சகல நன்மைகளையும் எடுத்துக்கூறி, அவரிடத்தில் அவ்விடத்திய இராஜாக்களும் தலைவர்களும் ஜனங்களும் கொண்டிருக்கிர மதிப்புக்கும் வியப்புக்கும் அடையாளமாகவும், அவர் அத்தேசத்திற்குச் செய்திருக்கிற பெருத்த உபகாரங்களை பின் வரும் சந்ததியார்களுடைய ஞாபகத்திலும் நிலைநாட்டுவதற்கு அடையாளமாகவும் சாஸ்வதமான மிமோரியல் ஏற்படுத்தும்பொருட்டு கையொப்பம் வாங்கும்படி தீர்மானித்தார்கள்.

**கல்கத்தா.**—இந்தப்பட்டணத்திலே வஜீர்கான் மசூதிக்கெதிரில் இப்போதுதான் கட்டப்பட்டவீட்டில் முந்திய புதவாரம் ராத்திரி தீப்பிடித்தது. அதற்குக் காரணந்தெரியாவிட்டாலும், எரிந்துகொண்டிருந்த வர்த்தி நழுவி விழுந்து தீயுண்டாயிற்றென்று எண்ணப்பட்டது. இரண்டாவது மெத்தையில் தூங்கிக் கொண்டிருந்த ஒருவன் தீயில் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பித்துக்கொள்ளத் தெருவில் குதித்ததினால் பலமானகாயமடைந்து ஆசுபத்திரிக்குக் கொண்டுபோக வேண்டிய தசையிலிருந்தான். போலீசார்சீக்கிரத்தில் இரண்டுதண்ணீர் எந்திரங் கொண்டுவந்து தீயை அவித்துப்போட்டார்கள்; இல்லா விட்டால் பெருத்த சேதமுண்டாயிருக்கும்.

கடிதநேயனொருவனெழுதியதாவது :—பிரசித்தமடைந்த ராஜாராஜேந்திரலால முல்லிக் அவர்கள் இறந்து போனதினால் ஜனங்களுக்குப் பெருந்துன்ப முண்டாயது. இவர் முல்லிக் வம்சத்தில் ஒருவருடைய ஸ்வீகாரபுத்திரர். தமக்குக்கிடைத்த பிதிரார்ஜிதச் சொத்தை வெகுவாய் விர்த்திசெய்தார். சுபாவத்திலே தருமகுணசீலராதலால், அன்னசத்திரம் ஏற்படுத்தவேண்டு மென்கிற நோக்கமவைத்திருந்து, பட்டணத்தின் நடு கர்ப்பத்திலே தமது அரமனைஸ்தானத்தில் தாமே பார்வையிடும்படியாக ஒரு அன்னசத்திரங்கட்டுவித்தார். அதில் தினந்தோறும் 300 பேருக்கு அதிகமாகவே போஷிக்கப்படுகிறார்கள். தம்முடைய சுயஜாதி விதந்துகளையும் தாய்தகப்பனற்ற சிறுவர்களையும் ஆதரிப்பதற்காக நிதி ஏற்படுத்திவைத்திருக்கிறார். இங்கிலீஷ்காரர்களால் தற்காலத்து ராசாக்களாகச் செய்யப்பட்ட சகலமானவர்களுக்குள்ளும், உண்மையான ராசாவுக்குரிய சிறந்த குணங்களில் சிலவற்றை இந்தப்பட்டணத்து ராஜாராஜேந்திர முல்லிக் அவர்களிடத்தில் காணலாம். அவர் பெருமைக்குப் பாடுபட்டதில்லை. சாதாரணமாய் வலது கையால் செய்வது இடதுகைக்குத் தெரியாதபடி தருமஞ்செய்து வந்தவர். இவருடைய மேன்மையான குடும்பத்தின் பெயரைக்காப்பாற்றத்தக்க யோக்கியமான புத்திரர் இவருக் கிருக்கிறாரென்று சொல்ல வெகுசந்தோஷமாயிருக்கிறது.

**சிம்லாவுக்கு** இருப்புப்பாதை போடுகிறசங்கதி கொஞ்சம் முன்னுக்குவந்திருக்கிறது. வேண்டியிருக்கிற நிலம் எடுத்துக்கொள்ளும் பொருட்டு, அந்தப்பாதை செல்லவேண்டிய சமஸ்தானங்களின் தலைவர்களோடு கவரன்மெண்டார் இப்போது ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள்.

**லக்னோவில்** வடமேற்கு மாகாணங்களின் லிஜிஸ்லேட்டிவ் கவுன்சில்கூடிய சபையிலே, அந்த கவுன்சலில் செய்யப்படுகிற ஆக்டுகளில் பிரயோகிக்கப்படும் பாஷையைச் சுருக்குவதற்காக ஒரு ஆக்டு கிரமமாய் ஜாரி செய்யப்பட்டது. இந்தியாமுழுவதும் மற்ற லிஜிஸ்லேட்டிவ் கவுன்சில்களைக்குறித்த அவ்வித ஆக்ட்டு செய்யப்பட்டால் பிரயோசனகரமாயிருக்கும்.

**ஜபானில்** அன்னியதேசத்துமாதிரியாகக் கடுதாசி செய்வது இப்போது வெகு முயற்சியாய் நடந்துவருகிறது. முன்னே உபயோசமாகிவந்த ஒஜீகடிதாசி எந்திரசாலைகளில் நாற்பதனாயிரம ராக்சல் கடுதாசி இருப்பாக வைத்திருப்பது கஷ்டமாயிருந்ததில்லை. முன்னே இருப்பு அதிகமாய்ச் சேராதபடி பார்ப்பது கஷ்டமாயிருந்தது; இப்போது அப்படிக்கல்லாமல், வேண்டியமட்டில் சர்பராசெய்வது கஷ்டமாயிருக்கிறது. மாசமொன்றுக்கு மூன்றாயிரம ராக்சல் கடுதாசி விற்பனையாகிறது. இன்னும் அதிகவிர்த்திக்கிடமிருப்பதாகவதந்தி.

**ஹைதராபாதிலே** இனி மந்திராலோசனைமுதலிய பிரதான காரியங்களை நடத்துவதற்காக செய்யப்பட்ட ஏற்பாடுகளை செகந்தராபாத் பத்திரிகை சுருக்கமாகக கூறுகிறது. திவான உத்தியோகத்தைக கமீஷன் உத்தியோகமாக்கும்படி உத்தேசம். அவர் தம்முடைய அதிகாரத்தையும் ஆக்ஞையையுஞ் செலுததுவதில, சமஸ்தானத்தின் பிரதான செக்ரிட்டேரிகளில் இரண்டுபேர் அவரோடு கலந்திருப்பார்கள். அவ்விருவருடைய தீர்மானம் மந்திரியினுடைய தீர்மானத்தோடு ஒததிரா விட்டால், இவர் அபபடிப்பட்ட சங்கதியை பைசலுக்காக நைஜாம் அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டியது.

**ஜான்மார்சன்** கப்பலில் போட்ஸ்வேன் உத்தியோகஸ்தராகிய ஆந்துருகிறாஜியென்பவர் பொம்பாயில் கப்பலைவிட்டிறங்கியிருந்தபோது, அவர் சோல்ஜரைப்போலக் காணப்பட்டபடியால், அவரைத் தண்டைவிட்டோடிப்போனவரென்று மிலிட்டேரி அதிகாரிகள் பிடித்துக்கொண்டு, கப்பலுக்குப் போகவொட்டாமல் தடுத்தார்கள். அவரில்லாமலே கப்பல் போய்விட்டது. விசாரணையில் அவருக்கு விரோதமாய் ஒன்றும் ருசுவாகவில்லை. எல்லாம் அவருக்கு அனுகூலமாகவே, அவர் யோக்கியரென்றும், கப்பல் சபர்செய்கிறவரென்றும், யோக்கியதையினாலே தற்காலநிலைமைக்கு உயர்த்தப்பட்டாரென்றும் ருசுவாயிற்று. அதிக சிரத்தை சில சமயங்களில் பிறருக்குக்கஷ்டத்தைக்கொடுக்கிறது.

**நியூசவுத்வேல்ஸ்** நாட்டில் வெகு ஜனங்களுக்கு ஜீவனோபாயமில்லாமையால் அதிக குழப்பமுண்டாயிருந்தது. அந்த நாட்டில் பலவிடங்களிலே கவரன்மெண்டார் அனேகருக்கு நானாவிதமான பரிகாரவேலையிட்டார்கள். அந்த ஜனங்களில் பெரும்பாலார் அந்தவேலையோடு திருப்தியடைந்து சராசரியில் சுமாரான கூலிபெறறுவந்தார்கள். அந்த வேலைகள் வெகுவாய்ப் பிரதிபலன் கொடுக்கத்தக்கவைகளே. தானியமாகக் கூலி கொடுத்துவந்ததை கவரன்மெண்டார் நிறுத்திவிட்டதனால், வேலைக்கு அலைந்துகொண்டு சுற்றுப்பக்கங்களிலிருந்து வந்தவர்களில் அநேகர் அந்த நாட்டைவிட்டுப்போய்விட்டார்கள்.

**ஆஸ்திரேலியாவில்** இல்லவாராடிஸ்திரிக்ட்டிலே ஒரு நிலக்கரிசுரங்கத்தின் வாயினின்றும் ஒருவிதகோரமானவாயு அதிவிசையாய் வெளிப்பட்டு, ஆண்களும் பசகளுமாகிய 83 சுரங்கம் வெட்டிகளை மடியச்செய்தது—60 மனைவிகளைவிதந்துகளாக்கியது, சுமார் 300 குழந்தைகளைத் தகப்பனற்றவையாக்கியது.

**சென்னையிலே** முனிசிபல் ரிஜிஸ்தரின்படி சென்ற மீ 23 உ முதல் 29உவரையிலே ஒரு வாரத்திற்கு மரணம் யூரோபியன் 1, ஈஸ்டிந்தியர்கள் 8, சுதேச கிரிஸ்தவர்கள் 8, இந்துக்கள் 211, மகமதியர்கள் 38, ஆக 266. இவற்றுள், அம்மையினால் 1, சின்னம்மையினால் 1, சுரத்தினால் 60, சீதபேதியினால் 35, அதிசாரத்தினால் 11, மற்ற வியாதிகளால் 158. இதற்கு முந்திய பத்து வருஷத்திற்கு அதேவாரத்தில் சராசரி மரணம் 263. பிரஸ்தாபவாரத்திலே மரணவீதம் வருஷமொன்றுக்கு 1000 பேரில் $34\frac{1}{2}$ ஆகிறது; முந்திய பத்துவருஷத்திய சராசரிவருஷமொன்றுக்கு 1000 பேரில் $34\frac{1}{3}$ ஆகிறது.

உள்ளூர்மெம்பர் - மூன்றுமாசத்திற்கு—ரூ 3— 0—0
வெளி ” ” —ரூ 1—14—0
செலுத்தவேண்டும். அப்படி சேருகிறவருக்கு "தினகர்" என்னும் இங்கிலீஷ் பத்திரிகையாவது, "தத்துவவிவேசினி" யாவது இலவசமாக அனுப்பப்படும்.

---

## தத்துவவிவேசினி

**நான்குபக்கம், பிரதி 1க்கு விலை அணு 1.**

---

## தமிழ்சந்தாவிபரம்.

| | | Rs | A. | P. |
|---|---|---|---|---|
| மாசம் | 1-க்கு | 0 | 4 | 0 |
| ஷை | 3-க்கு | 0 | 10 | 0 |
| ஷை | 6-க்கு | 1 | 2 | 0 |

முன்பணஞ்செலுத்தவேண்டும். சந்தாவோடுகூட, இந்தியாவிலும் பர்மாவிலுமுள்ள வெளியூரார் மாசமொன்றுக்கு ஒருஅணுவீதமும், சிலோனிலுள்ளவர்கள் வாரமொன்றுக்கு ஒரு அணு வீதம ஆறுமாசத்திற்கு ரூ 1—10—0 மும் தபாற்செலவு சேர்த்தனுப்பவேண்டும். ஒரு வருஷத்துகற்குப் பணமனுப்ப விரும்புகிறவர்கள் ஆறுமாசத் தொகைக்கு இரட்டிப்பு அனுப்பவேண்டும். தபாற்செலவு குறைவுபடக் கோருகிறவர்கள் தெரிவித்தால், பத்திரிகைகள் இரண்டுவாரத்திற்கொருவிசை சேர்த்தனுப்பப்படும் பட்சத்தில், பாதியும், நான்குவாரத்துக்கொருவிசை சேர்த்தனுப்பப்படும்பட்சத்தில் முக்கால்பங்கும் தபாற்செலவு கூடிவரும்.

பத்திரிகைக்கு எழுதும்கடிதமுதலியவிஷயஙகளை
மாத்திரம
சென்னை முத்தியாலுப்பேட்டை இலிங்கசெட்டிவீதி
307 - வது நம்பர் வீட்டில்
பு· முனிசுவாமிநாயகருக்கும் ;
1886ம் - வருஷ முதல் சந்தாக்களையும்,
இங்கிலீஷ் பத்திரிகைகளையும்,
வேப்பேரி சில்வர்ஸ் ரோட்டில்
மதிருஸ் செகுலர்சொசைட்டி ஆனரரிசெக்ரிட்டேரி
மெஸ்டர்· அப்ஷன்துரை யவர்களுக்கும்
அனுப்புதல்வேண்டும்.

---

Printed and Published for the Proprietor at the
VURTHAMANATHARUNGINI PRESS, No. 174,
Davaraja Moodelly Street,—Madras.